## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (19.09.2023 முதல் 23.09.2023)

**அறிக்கைஎண்: 75/2023** **தேதி : 18.09.2023**

**நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை**

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 - 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (19.09.2023 முதல் 23.09.2023).**

| கடந்தவாரவானிலை (15.09.2023 முதல் 17.09.2023) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (19.09.2023 முதல் 23.09.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 15/09 | நாள்-2 16/09 | நாள்-3 17/09 | தேதி | நாள்-1 19/09 | நாள்-2 20/09 | நாள்-3 21/09 | நாள்-4 22/09 | நாள்-5 23/09 |
| 3.8 | 0.0 | 6.6 | மழை (மி.மீ.) | 22 | 8 | 15 | 18 | 14 |
| 37 | 35 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 34 | 33 | 33 | 33 | 32 |
| 26 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 25 | 24 | 24 | 24 | 23 |
| 5 | 5 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 8 | 8 | 8 |
| 77-71 | 76-72 | 80-80 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-70 | 80-70 | 80-60 | 80-60 | 90-60 |
| 12 | 9 | 9 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 18 | 20 | 20 | 18 | 20 |
| வட மேற்கு | தென் மேற்கு | தெற்கு | காற்றின் திசை | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு |

**நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 19.09.2023 முதல் 23.09.2023 ஆகிய தினங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32 – 34 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 25 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 - 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 - 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 18 - 20 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| நெல் | நாற்றாங்கால் | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி தாளடி நாற்றாங்கால் தயார் செய்யவும். |
| | | விதைத்த நாற்றாங்காலில் விதைகள் மழை நீரினால் சிதறுவதை தடுக்க, வைக்கோலை நாற்றாங்காலில் பரப்பிவிடவும் |
| பருத்தி | அறுவடை | மழையினால் முதிர்ந்த பருத்திக்கு ஏற்ப்படும் சேதத்தை தவிர்க்க மழைக்கு முன்னதாக முதிர்ந்த பருத்திகளை அறுவடை செய்து மழை நீர் படாமல் பாதுகாக்கவும். |
| வாழை | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகள் | மாடு | வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயில் நேரங்களில் நன்கு உலர வைத்த பிறகு கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்தில் இருந்து தங்கள் கால்நடைகளை பாதுகாக்கலாம். |

## குறுஞ்செய்தி

விதைத்த நாற்றாங்காலில் விதைகள் மழை நீரினால் சிதறுவதை தடுக்க, வைக்கோலை நாற்றாங்காலில் பரப்பிவிடவும்

**இயக்குநர்**